TRS

10 - ஆம் வகுப்பு

# மூன்றாம் திருப்புதல் தேர்வு – 2024

## தமிழ்

காலம் : 3.15 மணி

மதிப்பெண்கள் : 100

பகுதி – I ( மதிப்பெண்கள் : 15 )

15 × 1 = 15

அ) சரியான விடையைத் தேர்வு செய்க.

1. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.
அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

2. காய்ந்த இலையும், காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
அ) இலையும், சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும்சண்டும்

3. கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுள் உணவுத் தொடர்பான பழமொழியைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ஆ) அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு
இ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் ஈ) ஆடிக்காற்றில் அம்மியும் நகரும்

4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ________________
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

5. 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' – பாரதியின் இக்கூற்று உணர்த்தும் கருத்து
அ. பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.
ஆ. பலகலைகள் தமிழில் புதிததாக தோன்ற வேண்டும்.
இ. உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்
ஈ. கலைச் செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்க வேண்டும்.

6. 'வாய்மையேமழைநீராகி' – இத்தொடரில் வெளிப்படும் அணி____________
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

7. தமிழ்த் தொண்டு என்னும் தொடர் ________
அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) வேற்றுமைத் தொகை

8. 'ஓரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்' – என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
அ) காடு ஆ) நாடு இ) வீடு ஈ) தோடு

9. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ________
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

10. இவற்றில் திணை வழுவமைதியைக் காண்க
அ) 'இந்த பாப்பா தூங்கமாட்டாள்' என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது.
ஆ) இரவெல்லாம் நாய் கத்திக் கொண்டே இருந்தது.
இ) 'வாடா செல்லம்' என்று தாய் மகளை அழைப்பது.
ஈ) 'என் தங்கை வந்தாள்' – என்று பசுவைக் குறிப்பிடுவது.

11. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

பாடலைப் படித்து வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடையளிக்க:-

உய்முறை அறியேன்; ஓர்ந்த
உணர்வினொத்து உறுப்பும் இல்லா
மெய்முறை அறியேன்; மெய்தான்
விரும்பிய உணவுதேடச்
செய்முறை அறியேன் ; கானில்
செல்வழி அறியேன்; தாய்தன்
கைமுறை அறிந்தேன் தாயும்
கடிந்தெனைத் தனித்துப் போனாள்"

Dr. G. THIRUMOORTHI, M.Sc., B.Ed., Ph.D.,
Guest Lecture
PG and Research Department of Physics
Government Arts College (Autonomous)
SALEM - 636 007.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

12. இப்பாடல் இடம் பெற்ற நூல்
அ. சிலப்பதிகாரம் ஆ. முல்லைப்பாட்டு இ. பரிபாடல் ஈ.தேம்பாவணி

13. இப்பாடலின் ஆசிரியர் _____
அ. இளங்கோவடிகள் ஆ. வீரமாமுனிவர் இ. குமரகுருபரர் ஈ. கீரந்தையர்

14. மெய்முறை என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.
அ. வினைத் தொகை ஆ. வேற்றுமைத் தொகை
இ. உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை ஈ. உவமைத் தொகை

15. இப்பாடலில் கான் என்பதன் பொருள்
அ. உணவு ஆ. காணுதல் இ. காடு ஈ. வழி

பகுதி – II ( மதிப்பெண்கள் : 18 ) பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4 × 2 = 8

21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ. தமிழ் இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது
ஆ. அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.

17. மொழிபெயர்ப்பு என்றால் என்ன?

18. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே' உறங்குவாய் உறங்குவாய்' கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

19. சதாவதானம் என்றால் என்ன?

20. தற்கால உரை நடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

21. பொருள் – என முடியும் குறளை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

22. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.

23. வெளிப்படை விடைகள் யாவை?

24. ஏற்ற தமிழ்ச்சொற்கள் எழுதுக : அ. கோல்ட்பிஸ்கட் ஆ. ஈக்வல்

25. கலைச்சொல் தருக.
அ) TEMPEST ஆ. WHIRLWIND

26. பழமொழியை நிறைவு செய்க.
அ) உப்பிட்டவரை __________ ஆ) விருந்தும் மருந்தும் _______

27. சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக. : பலகையொலி
குறிப்பு :- செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா
கூட்டப் பெயர்களைக் காண்க : அ) புல் ஆ) கல்

28. அருணா ஓடினாள் – பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும் மாற்றுக.

பகுதி – III ( மதிப்பெண்கள் –18 )

பிரிவு – I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க: 2×3=6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' – இதுபோல் இளம்பயிர் வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைத்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.
வாய்மையின் சிறப்பை அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே சிறந்த நா என்ற கருத்தை "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவு கோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான் துன்பத்தின் கதவை திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது..



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

அ) உவமையான நா என்பதனை இலக்கியங்கள் எவ்வாறு கூறுகின்றன?

ஆ) நாக்கு ஓர் அதிசய திறவுகோல் என கருத காரணம் யாது?

இ) எது சிறந்த அறமாக இலக்கியங்கள் பேசுகின்றன?

31. பொய்க்கால் குதிரையாட்டம் ' என்னும் நிகழ்கலை குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக

பிரிவு – II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

34 ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்து தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. மன்னன், இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்?

34. " வாளால்" எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடலை அடிமாறாமல் எழுதுக.

(அல்லது ) " வெய்யோன் " – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

பிரிவு –III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க : 2×3=6

35. தோட்டத்தில் மல்லிகைப் பூ பறித்த பூங்கொடி , வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள் . வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணிபார்த்தாள் இப்பத்தியில் உள்ள தொகைச்சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

36. மதிநுட்பம் நூலோடுடையார்க் கதி நுட்பம்
யாவுளமுன் நிற்பவை – இக்குறளை அலகிடுக.

37. தன்மையணி என்பதனை விளக்கி, அதன் வகைகளை குறிப்பிடுக.

பகுதி –IV ( மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25


38. அ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்கு பாராட்டுரை ஒன்றினை எழுதுக.( அல்லது )

ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

39. உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுந்தடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவணச் செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ. நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறு பரிந்துரைத்துக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



41. எண்–6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழழகனின் மகன் இளந்திரையன். கணினிப் பயிற்றுநர் பணிவேண்டி தன் விவரப்பட்டியல் நிரப்புகிறார். தேர்வர் தன்னை இளந்திரையனாகப் பாவித்து பணிவாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புக.

42. அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியர் பெயர், நிறுவப்பட்டகாலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை போன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக. ( அல்லது )



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

ஆ) மொழிபெயர்க்க:-

Malar : Devi,switch off the lights when you leave the room

Devi : Yeah! We have to save electricity

Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi : Superb news! If we launch artificial moons,they can assist in disaster relief by beaming light on areas that lost power!

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும். பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும். மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும். வேலை வாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும். நாடு, இனமொழி எல்லைகள் கடந்து ஒருலகத் தன்மையைப் பெறமுடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டு தூதரகங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிறமொழிகளைக் கற்றுத் தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

(i) ஒருலகத் தன்மையைப் பெறுவதற்கான முக்கிய வழி முறையாக எதனைக் கொள்ளலாம்?

(ii) பிறமொழிகளைக் கற்பதற்கான வாய்ப்புகளைத் தருவன எவை?

(iii) தூதரகங்களின் முதன்மையான பணிகளில் ஒன்று எது?

(iv) மொழிபெயர்ப்புக் கல்வியின் பயன்களை எழுதுக.

(v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

## பகுதி – V ( மதிப்பெண்கள் : 24 )

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24

43. அ) இறைவன், புலவன் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் விளக்குக. (அல்லது)

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.

சூழல் : வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ்மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல். (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு நாடகம் எழுதுக.

மாணவன் – கொக்கைப் போல ,கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.

45. அ) " புயலிலே ஒருதோணி " கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில் . தோணிபடும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன ? ( அல்லது )

ஆ) குறிப்புகளைக் கொண்டு பொருட்காட்சிக்குச் சென்ற நிகழ்வைக் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – மிக்ஜாம் புயல் – வெள்ளபாதிப்பு– மக்களின் துயர் – அரசின் நடவடிக்கைகள் – மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு – முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com